# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

செய்த தவறுகளை வாய்விட்டுச் சொல்லி வருத்தப்பட்டு அழுதால் நம்மைத் தண்டிக்கிறவர்கள் மனம் சற்று இளகும். இது உலக நியதி. துன்பங்களின் கொடுமை கசியாமல் நரக வாசியானவன் புலம்புவதைப் பற்றிச் சென்ற கட்டுரையில் விவரம் தரப்பட்டது. ஆனால் அதைச் செவிமடுக்கும் எம கிங்கரர்கள் மனம் இளகுவதில்லை. பெருமாள் அவர்களை அப்படிப் படைத்திருக்கிறார். அடிபடுகிறவனுடைய புலம்பலைக் கேட்டு இன்னும் ஆத்திரம் அதிகமாகி அவனை உலக்கையால் புடைப்பார்கள்.

“உனக்குத் தான் சாதுர்யமாகப் பேசத் தெரியுமா? பாபத்தைப் பார்த்தால் லாபத்தை பார்க்க முடியாது என்று உலகத்தில் பொன்மொழி உதிர்த்தாயே! தர்மம் வேறு, தொழில் வேறு என்று புது நியாயங்கள் பேசி குறுக்குவழியில் கோடி கோடியாய்ப் பொருள் சேர்த்தாயே. உடல் இன்பம் ஒன்றே பிரதானமாய் எண்ணி ஆன்மீகத்தைப் புறக்கணித்த அயோக்கியனே! இந்தா, பெற்றுக் கொள்!” என்று பேரொலியோடு கூவி பலவகையாக அடிப்பார்கள்.

இந்த இடத்தில் கருடாழ்வாருக்குப் பெருமாள் சில இடங்களின் பெயர்களைக் கூறுகிறார். யாம்யம் என்று ஒன்று, அவ்யாம்யம் என்று ஒன்று, சௌரி என்று ஒன்று, குரூரபுரம் என்று ஒன்று, க்ரௌஞ்சம் என்று ஒன்று இவையெல்லாம் இறந்தவனை சித்ரவதைப்படுத்தும் நகரங்கள். இறந்தவனுடைய புதல்வன் சிரார்த்தம் செய்தால் அதன் பலனாக இந்த இடங்களில் ஒரளவு சாந்தி கிடைக்கும். இல்லையென்றால் பசி, குளிர், கல்மழை, தாங்கொண்ணாத வெப்பம், அழுகை, அடி, உதை, என்று பல துன்பப்பட்டு வைதரணி என்ற ஒரு நதிக்கரையை அடைகிறான்.

இந்தநதி நாமெல்லாம் கேள்விப்பட்டிராத நதி. ஏனென்றால் இந்த நதியில் ஒடுவது நீரல்ல. வேறு என்ன ஓடும்? என்று வியக்கிறீர்களா? நூறு யோஜனை நீளம் – அதாவது அன்று சீதையைப் பார்க்க அனுமன் கடல் தாண்டிய தூரம்– உள்ள இந்த நதி முழுவதும் ரத்தமும், சீழும், சிறுநீரும், மலமும், துஷ்ட ஜந்துக்களும் மட்டுமே நிறைந்திருக்கும். இந்த நதியில் எமகிங்கரர்கள் இறந்தவனைப் பிடித்து தள்ளி விடுவார்கள். அப்படி தள்ளிவிடப்படும் பொழுது அவன் என்ன என்ன துன்பம் அடைவான் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த நதியில் எவை நிறைந்திருக்கின்றன என்பதை வைத்து நீங்களே யூகிக்கலாம்.

இந்த வைதரணியின் துன்பத்திலிருந்து தப்ப ஒரே வழி வைதரணி கோதானம் என்கிறார் பெருமாள். இந்த கோதானத்தை,

தான் இறப்பதற்கு முன்பு கோதானம் செய்திருந்தால் அல்லது அவன் இறந்தபிறகு அவன் சார்பில் அவன் புதல்வன் செய்தால் வைதரணி நதியை துன்பம் இன்றிக் கடக்கலாம் என்கிறார் பெருமாள். இந்த நதியைக் கடக்கும் போது இறந்தவன் இறந்து 7 மாதம் ஆகியிருக்கும் என்கிறார் பெருமாள். அதுவரை ஒவ்வொரு மாதமும் அவன் புதல்வன் பிண்டம் கொடுத்திருந்தால் அது அவனுக்குக் கிட்டும். இல்லையென்றால் அதுவும் இல்லை. ஆனால் இந்த ஏழாவது மாதம் ஒரு சிக்கல் முளைக்கிறது.

அது என்னவெனில் இந்த ஏழாவது மாசிகப் பிண்டத்தை அவன் புதல்வன் முறைப்படி சடங்குகளுடன் செய்து கொடுத்தாலும் இறந்தவன் பூமியில் தானம் செய்யாத கருமியாய் வாழ்ந்திருந்தான் என்றால் அந்தப் பிண்டம் அவன் கைக்கு கிடைக்காதபடி பிசாசுகள் தட்டிப் பறிக்கும். ''உன்னை நம்பி வந்த யாசகர்களை இடித்துப் பேசி விரட்டி விட்டாயே உனக்கு இந்த அன்னமெல்லாம் ஒரு கேடா?'' என்று பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டு விடும். தானம் செய்யாவிட்டால் என்ன என்று அலட்சியமாக நினைக்கிறவர்கள் இந்த இடத்தில் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

வரிசையாக யமவாதைகளை, கருடனுக்குக் கூறிக் கொண்டு வரும் பெருமாள் இந்த இடத்தில் தானத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகிறார். ''பசி, பசி'' என்று அந்த நரகவாசி கதறும் போது, அவனைக் கண்டு இரங்காது பூமியில் வாழ்வோருடைய கருணையின்மையைக் கண்டித்து, யமகிங்கரர்கள் நீண்ட உரையாற்றுவார்கள், என்கிறார் பெருமாள். வாகனங்களில் ஏறிக் கொண்டு பெரியோரை மதிக்காமல் ஆடம்பரமாக அகம்பாவமாக பயணிப்பவர்களே! உழைப்பாளி, முதலாளியாக மாறுவதும், முதலாளி, உழைப்பாளியாக மாறுவதும் அவரவர் கர்ம வினையின் பயன்தானே! உலக வாழ்வில் செல்வங்கள் சேரும்போது அவற்றை, பூஜைக்கும் தானதர்மங்களுக்கும் செலவிட்டு கணக்கில்லாத புண்ணியங்களை சேர்த்திருக்கலாமே! அதை விடுத்துப் பாவங்களையல்லவா, மூட்டை மூட்டையாகச் சேர்த்திருக்கிறீர்கள்? பசித்தவனைப் பார்த்து பரிகசித்தவர்களே! பசிதாகம் என்றால் என்னவென்று இப்பொழுது புரிகிறதா'' என்று சொல்லாலே சுடுவார்கள் என்கிறார் எம்பெருமான்.

இதையெல்லாம் படிக்கும் போது யாருக்கும் இன்பமான அனுபவமாக இராது என்பது உண்மை. ஆனால் இன்பம் ஒன்றே இலக்கு என்று எண்ணி இறுமாந்து வாழும் மானிடப்பிறவிக்கு துன்பம் என்ற ஒன்று காத்திருக்கிறது என்பதை உணர்த்த, புராண கர்த்தாக்களுக்கு வேறு வழி இல்லையே! கசப்பாயிருந்தாலும் சில உண்மைகளை ஜீரணித்துத்தானே ஆக வேண்டும்? இது பிறர் நன்மைக்காக அல்ல, நம் நன்மைக்காகத் தான். எட்டாவது மாதம் என்ன நடக்கிறது என்பதையும் அதன் பிறகு ஒவ்வொரு மாதமும் என்ன காத்திருக்கிறது என்பதையும் அடுத்த கட்டுரையில் பார்ப்போம். (தொடரும்)